## November 14, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்க அரசுத் துறைகளின் செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் நாடாளுமன்றத்தில் எம்.பி.க்களிடயே கருத்துவேறுபாடு நிலவியதால் இதுவரை இல்லாத அதிக நாள்களுக்கு நீடித்துவந்த அந்தத் துறைகளின் முடக்கம் முடிவுக்கு வந்துள்ளது.
   i. மருத்துவக் காப்பீட்டுக்கு மானியம் அளிப்பதற்கான உத்தரவாதம் இல்லாதது போன்ற பல்வேறு காரணங்களால் அரசுத் துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான மசோதாவை எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் எதிர்த்து வந்தனர். இதனால், அரசுத் துறைகள் இது வரை இல்லாத அதிகபட்சமாக 43 நாள்களுக்கு முடங்கின.
   ii. இந்தச் சூழலில், தங்கள் கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராக, சமரசங்களுடன் கூடிய நிதி ஒதுக்கீட்டு மசோதாவை ஏற்க சில ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் முன் வந்ததையடுத்து, அந்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. அதில் அதிபர் டொனால்ட் டிரம்ப்பும் கையொப்பமிட்டதையடுத்து, அரசுத் துறைகள் முடக்கம் முடிவுக்கு வந்தது.
   iii. ஒவ்வோர் ஆண்டும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் மசோதா மூலமாகத்தான் அமெரிக்காவின் ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மசோதா நிறைவேற்றப்படாவிட்டால், அத்தியாவசியப்பணிகளை மேற்கொள்ளும் அரசு ஊழியர்களைத் தவிர, மற்ற துறை ஊழியர்கள் அனைவருக்கும் ஊதியம் இல்லாத கட்டாய விடுப்பு வழங்கப்படும்.
   iv. அமெரிக்க அஞ்சல் துறை, மருத்துவத் துறை, சமூகப் பாதுகாப்பு பண வழங்கல், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு, வங்கிகள், நீதிமன்றங்கள், எல்லை பாதுகாப்புப்படை, ஃபெடரல் சட்ட அமலாக்கத் துறை, ராணுவத் துறையினர் மட்டும் வழக்கம்போல பணியாற்றுவார்கள். இதில் ராணுவத்தினர் பணியில் ஈடுபட்டாலும் அவர்களுக்கு ஊதியம் கிடையாது.
   v. தேசிய பூங்காக்கள், பார்வையாளர் மையங்கள், சுற்றுலா தொடர்பான அரசுக் கட்டடங்கள், அரசு அருங்காட்சியகங்கள், அரசு நூலகங்கள் உள்ளிட்டவை மூடப்படும். இவ்வாறு, அமெரிக்க அரசுத் துறைகள் முடக்கப்படுவதால் தினமும் கோடிக்கணக்கான டாலர் இழப்பு ஏற்படுவதுடன், லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் ஊதியம் இல்லாமல் தவிக்கும் நிலை ஏற்படும்.
2. மேக்கேதாட்டு அணை திட்ட அறிக்கைக்கு எதிரான தமிழக அரசின் மனுவை வியாழக்கிழமை (நவ.13) நிராகரித்த உச்சநீதிமன்றம், தடுப்பணை விவகாரத்தில் கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கை மீது மத்திய நீர்வள ஆணையமே முடிவு எடுக்கும் எனக் கூறியது.
   i. மேக்கேதாட்டு திட்டம் தொடர்பாக கர்நாடகம் விரிவான திட்ட அறிக்கை மட்டும்தான் தாக்கல் செய்துள்ளது. எனவே, ஆரம்ப நிலையிலேயே அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதை ஏற்க முடியாது எனக் கூறி தமிழகத்தின் ஆட்சே பணையை உச்சநீதிமன்றம் நிராகரித்தது.
   ii. மேக்கேதாட்டு திட்டம் தொடர்பான கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கைக்குத் தடை கோரி தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் 2018-ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தது.
   iii. புதிய அணையின் நோக்கமே தமிழகத்துக்கு வரும் நீரைத் தடுக்க வேண்டும் என்பதாகும். ஏற்கெனவே கர்நாடகத்தில் காவிரியின் குறுக்கே போதுமான அளவுக்கு தடுப்பணைகள் உள்ளன. எனவே, புதிய அணை கட்டத் தேவை.

3. வங்கதேசத்தில் மாணவர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
   i. மத அடிப்படைவாத அமைப்புகளின் உத்தரவுப்படி வங்கதேச இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் செயல்படுவதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
   ii. வங்கதேசத்தில் கடந்த ஆண்டு பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆட்சிக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்தது.
   iii. இதையடுத்து ஷேக் ஹசீனா கடந்த 2024 ஆகஸ்ட் மாதம் அந்நாட்டில் இருந்து தப்பி இந்தியாவில் தஞ்சமடைந்தார். அதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட இடைக்கால அரசின் தலைவராக நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் நியமிக்கப்பட்டார்.
   iv. இந்நிலையில், வங்கதேசப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் நியமனம் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவிப்பை முகமது யூனுஸ் அண்மையில் திரும்பப் பெற்றார். இதையடுத்து, மத அடிப்படைவாதிகளின் மிரட்டலுக்கு யூனுஸ் பயந்துவிட்டதாக வங்கதேச மாணவர்கள் குற்றஞ்சாட்டினர்.
   v. இந்த நியமனங்களை மீண்டும் மேற்கொள்ள வலியுறுத்தி தலைநகர் டாக்கா, சிட்டகாங் உள்ளிட்ட நகரங்களிலும் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரிகளிலும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இது அந்த நாட்டில் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.
   vi. மத அடிப்படைவாதிகள் கல்வித் துறைக்குள் நுழைவதாகவும், இசையைத் தடை செய்ய முயற்சிப்பதாகவும் போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் தெரிவித்தனர். வங்கதேசத்தின் கலாசார அடையாளத்தைக் காக்க இசை மிகவும் முக்கியமானது என்றும் அவர்கள் கூறினர்.
4. ஜி7 கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியாக கனடாவில் நடைபெற்ற எரிசக்தி பாதுகாப்பு மற்றும் அரிய கனிமங்கள் குறித்த விளக்க அமர்வில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய் சங்கர் பங்கேற்றார்.
   i. கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஜி7 கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு கனடாவின் நயாகரா பிராந்தியத்தில் நவ.11, நவ. 12 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் அழைப்பின் பேரில், இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஜெய்சங்கர் அவரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.
5. ஈரான் நாட்டின் பலிஸ்டிக் ஏவுகணைத் திட்டத்துடன் தொடர்புடையதாக இந்தியா, சீனா உள்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 32 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மீது அமெரிக்கா தடை விதித்தது.
   i. அணுசக்தி திட்டம், ஏவுகணைகள் மற்றும் பிற ஆயுதங்கள் தயாரிப்பை மேம்படுத்தும் ஈரானுக்கு அழுத்தம் தரும் வகையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வழிகாட்டுதலின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.
   ii. இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ஈரான், சீனா ஹாங்காங், ஐக்கிய அரபுஅமீரகம், துருக்கி, இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 32, நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதிக்கிறது. அணுசக்தி உறுதிப்பாடுகளை முறையாக கடைப்பிடிக்காததையடுத்து, ஈரான் மீது கடந்த செப்டம்பர் மாதம் ஐ.நா. விதித்த தடைகளின் தொடர்ச்சியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது'

எனத் தெரிவிக்கப்பட்டது.

6. இந்திய ராணுவத்துக்கு பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை கொள்முதல் செய்வதற்காக பொதுத் துறை நிறுவனமான பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் ரூ.2,095 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சகம் கையொப்பமிட்டது. இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'இன்வார் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை கொள்முதல் செய்ய பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் ரூ.2,095.70 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. லேசர் பொருத்தப் பட்டிருக்கும் இந்த ஆயுத அமைப்பு இலக்கை துல்லியமாகத் தாக்கும் திறனுடையது எனத் தெரிவிக்கப்பட்டது.
7. இந்திய ராணுவம், விமானப்படை மற்றும் கடற்படையின் ஒருங்கிணைந்த பாதுகாப்பு பயிற்சியான 'திரிசூல்' போர்ப் பயிற்சி குஜராத்தில் நிறைவடைந்தது.
   i. இந்திய கடற்படை தலைமையில் ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் கடந்த அக்.30 தொடங்கி இரு வாரங்களாக நடைபெற்ற இப்பயிற்சியில் 30,000 ராணுவ வீரர்கள், 25 கப்பல்கள் மற்றும் போர்க்கப்பல்கள், பல்வேறு போர் விமானங்கள் பங்கேற்றன.
   ii. குறிப்பாக குஜராத் மாநிலம் போர்பந்தரில் உள்ள மாதவ்பூர் கடற்கரையில் மேற்கொள்ளப்பட்ட ஆம்ஃபெக்ஸ் 2025 என்ற பெயரிலான முப்படைகளின் போர்ப் பயிற்சியில் டி-72 பீரங்கிகள், ஜாகுவார் போர் விமானம், எஸ்யு-30 எம்கேஐ போர் விமானங்கள் பங்கேற்றுத் தங்களது ஆற்றலை வெளிப்படுத்தின.
   iii. அதேபோல் நவீனகால போர் தொழில் நுட்பங்களை பிரதிபலிக்கும் வகையில் ட்ரோன்கள் மற்றும் ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகளும் இந்தப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டன. கூட்டுப் புலனாய்வு, கண்காணிப்பு, மின்னணு போர் மற்றும் இணையப் போர் ஆகியவை குறித்தும் தெளிவாக விளக்கப்பட்டது.
   iv. ஆத்மநிர்பர் பாரதம் முன்னெடுப்பின்கீழ் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு தளவாடங்களும் திரிசூல் போர்ப் பயிற்சியின்போது காட்சிப்படுத்தப்பட்டன.
8. இந்தியாவில் கடந்த 2015-ஆம் ஆண்டுமுதல் காசநோய் பாதிப்பு குறைந்துள்ளதற்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.
   i. உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி இந்தியாவில் கடந்த 2015 இல்லட்சம் பேரில் 237 பேர் என்று இருந்த காசநோய் பாதிப்பு, கடந்த 2024-இல் லட்சம் பேரில் 187 பேராக குறைந்தது.
   ii. இந்தியாவில் இந்நோயின் பாதிப்பு 21 சதவீதம் குறைந்துள்ளதாகவும் உலக அளவில் ஒப்பிடும்போது இது இரு மடங்கு குறைவு என்றும் மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.
9. பெண்களின் வசிப்பிடங்களுக்கே சென்று புற்றுநோய் உள்ளிட்ட நோய்களை கண்டறியக்கூடிய நவீன வாகனத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.
   i. காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த வாகனம் முதல்முறையாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பிற மாவட்டங்களில் 37 வாகனங்கள் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.
   ii. மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு திட்டத்தின் கீழ், மகளிர் நல்வாழ்வுக்காக ரூ.40 கோடியில் 38 நடமாடும் மருத்துவ ஊர்திகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
10. திருவாரூரில் ரூ.50 கோடியில் தனியார் ஜவுளி உற்பத்தி ஆலை அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் ஒப்பந்தம்

கையொப்பமானது.

i. தமிழக அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, எஸ்சிஎம் கார்மன்ட்ஸ் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்) இடையிலான இந்த ஒப்பந்தம் மூலம் 2,500 பேருக்கு வேலை வாய்ப்புகிடைக்கும்.